1981 ஏப்ரல் 10]

திரு. ஏ. எம். சேதுராமன்: தலைவரவர்களே, அதேபோன்று இந்தத் திட்டத்தின் கீழாக தமிழகத்திலுள்ள ஒன்றியங்களிலுள்ள அதிகாரிகளுக்கும் மற்ற அலுவலர்களுக்கும் அரசு வீடு கட்டும் திட்டம் ஏதாவது பரிசீலனையில் இருக்கின்றதா என்பதையும் அந்தத் திட்டம் எந்த சம்பள அடிப்படையில் நிறைவேற்றப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, இந்தத் தகவல்களுக்கு தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தானிப்பாடி கிராமத்தில் வரட்டாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணை

*வினா எண். 738 திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தானிப்பாடி கிராமத்தில் வரட்டாற்றின் குறுக்கே பாசனத்திற்கு அணை கட்டப்பட்டு பாசனத்திற்கு தேவையான பிரதான கால்வாய் முழுமையாக வெட்டப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: வரட்டாற்றின் குறுக்கே தானிப்பாடி கிராமத்தின் அருகில் அணைக்கட்டு கட்டும் வேலை முடிக்கப்பட்டுவிட்டது. இதன் மூலம் 224.28 ஏக்கர் தற்போது பயனடையும். கிராம மக்களின் வேண்டுகோளுக்கிணங்க அக் கிராமத்தில் உள்ள பயிர் நிலங்கள் 294.98 ஏக்கர் முழுவதும் பயன் பெறும் வண்ணம் வரத்து வாய்க்காலை நீட்டித்து கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக கூடுதல் ஒதுக்கீடு செய்து தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. த. வேணுகோபால்: தலைவரவர்களே, தானிப்பாடி கிராமத்தில் வரட்டாற்றின் குறுக்கே பாசனத்திற்காக கட்டப்பட்டுள்ள அந்த அணையிலிருந்து பிரதான கால்வாய் வெட்டப்படவில்லை என்று அரசுக்கு மனுக்கள் அனுப்பப்பட்டு இருப்பதாகவும், ஆகவே அக்கால்வாய் வெட்டப்பட இருப்பதாகவும் அமைச்சரவர்கள் கூறி இருக்கிறார்கள். அதனுடைய மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, 1.3 கிலோ மீட்டர் நீளம் கால்வாய் வேலையினை முடிக்க வேண்டியுள்ளது. இதற்காக 1.20 இலட்சம் ரூபாய் கூடுதலாகத் தேவைப்படுகின்றது.

திரு. த. வேணுகோபால்: தலைவரவர்களே, அணை கட்டப்படும்போதே பிரதானக் கால்வாய்க்கான மதிப்பீடுகளையும் சேர்த்து திட்டம் தயாரிக்கப்படுகின்றதா? அல்லது அணைக்குத் தனியாகவும், பிரதானக் கால்வாய்க்குத் தனியாகவும் மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றனவா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, இந்த இடத்திலே உள்ள அணை மிகவும் சிறிய அணைதான். ஆனால் அணை கட்டும்போதே போதுமான அளவுக்கு பிரதானக் கால்வாய் பற்றியும், கிளைக்கால்வாய்கள் பற்றியும் கவனத்திலே கொண்டுதான் மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் இந்த அணையைப் பொறுத்த வரையிலே ஆரம்பத்திலே 224 ஏக்கருக்கு மட்டுமே நீர் கொடுக்கக் கூடிய அளவுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. ஆனால் அங்கே 294 ஏக்கர் வரை பயன் பெறவேண்டும் என்று மற்றவர்களும் கேட்டுக்கொண்ட வேண்டு கோளின்படி திருத்திய மதிப்பீடும் அதற்குத் தகுந்தவாறு கால்வாய் வெட்டுவதற்கான திட்டங்களையும் அரசு தயாரித்திருக் கின்றது.

மதுரை மாவட்டத்திலுள்ள பெரியார் அணை.

*வினா எண் 739—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) மதுரை மாவட்டத்திலுள்ள பெரியார் அணையில், நீர்க்கசிவு ஏற்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அணையைப் பலப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

(இ) அணையில் எவ்வளவு நீரைத் தேக்கிவைக்க இயலும்?

(ஈ) கேரள மாநில அரசுடன் தமிழக அரசு செய்துள்ள ஒப்பந்தம் எவ்வாண்டு முடிவடையும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:— (அ) ஆம்.

(ஆ) அணையில் மேல் பகுதியில் கான்கிரீட்டால் மூடி போன்ற (R.C.C. Capping) அமைப்பு ஏற்படுத்தி அதன் மூலம் அணையின் எடையை அதிகரிக்கச் செய்து அணையைப் பலப் படுத்துவதற்கான பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அணையின் அடித் தளத்தில் உள்ள பாறையோடு சேர்த்து (Pre Stressed Cable anchors) முன் தகைவு செய்யப்பட்ட கம்பிகள் மூலம் இழுத்துக்கட்ட பூர்வாங்க வேலைகள் நடைபெறுகின்றன.

(இ) தற்போதுள்ள அணையின் நிலையைக் கருதி அணை யின் நீர்மட்டத்தை +136—அடியில் வைக்கப்பட்டுள்ளது.

(ஈ) கி.பி. 2885 ஆம் ஆண்டில் முடியும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, மதுரை மாவட்டத்திலுள்ள பெரியார் அணையில் நீர்க் கசிவு ஏற்பட்டு அதைச் சீர்படுத்தி அணையை வலுப்படுத்தக்கூடிய வேலை இப் போது நடைபெற்று வருவதாக தெரிவித்தார்கள். அவ்வாறு